**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் -2, பொள்ளாச்சி.**

**முன்னிலை திரு.E.பிரகாசம், பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்-2, பொள்ளாச்சி.**

**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**பட்டிகை விசாரணை வழக்கு எண். 38/2015**

**(CNR NO: TNCB120003652015)**

தமிழ்நாடு அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
நெகமம் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண். 70/2014 ...குற்றமுறையிடுபவர்

// எதிர் //

கார்த்திக் என்கிற சதீஷ் (22/2014),
த/பெ. ரத்தினசாமி,
155 ஜோதி நகர்,
C காலனி,
பொள்ளாச்சி. ...எதிரி

இவ்வழக்கானது கடந்த 08.01.2015 -ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு. V. மதிசேகர் B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**//தீர்ப்புரை//**

**1. குற்ற இறுதி அறிக்கை சுருக்கம்**

கடந்த 21.03.2014 ம் தேதி மாலை 16.50 மணிக்கு நெகமம் - வடசித்தூர் ரோட்டில் வாய்க்கால் மேடு முக்கு வளைவில் எதிரி கார்த்திக் என்ற சதீஷ் என்பவர் TN 37 AM 6939 மகேந்திரா சேம்பியன் மினி ஆட்டோவை வடக்கிலிருந்து தெற்காக அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சம்பவயிடத்தில் சாட்சி 1 ஓட்டி வந்த வாகனம் ஈச்சர் வேன் TN 41 AH 7659 பள்ளி பேருந்தின் மீது வலது பக்கம் மோதி விபத்தை

ஏற்படுத்தியதாகவும் அதில் பின்னால் நின்று கொண்டு வந்த சாட்சி வசந்த் என்பவருக்கு சொற்ப காயம் ஏற்பட்டதாகவும், வாகனத்தின் முன் பக்கம் உட்கார்ந்து வந்த சிவா என்கிற கிருஷ்ணன் என்பவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாகவும், மேலும் சதீஷ் குமார் என்பவருக்கு பலத்த இரத்த காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டதாக தெரிவித்து எதிரி மீது இ.த.ச. 1860 சட்டப்பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கைகள்), 338, 304(A) of IPC-ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் செய்துள்ளார் என்று நெகமம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு,**

மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள வழக்கு சம்பவம் சம்பந்தமாக, கடந்த 21.03.2014 ம் தேதி நெகமம் காவல்நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் செபாஸ்டியன் என்பவர் நிலைய பொருப்பில் இருந்தபோது, அ.சா.1 ராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி **அ.சா.ஆ.1** புகாரைப் பெற்றுள்ளார். மேற்படி புகாரினைப் பெற்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் புகாரின் அடிப்படையில் அடிப்படையில் **அ.சா.ஆ. 3** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

வழக்கினை அ.சா.8 காவல் ஆய்வாளர் ரவி என்பவர் புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு **அ.சா.ஆ.4** பார்வை மகசர் மற்றும் **அ.சா.ஆ.5** மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகசரில் உள்ள சாட்சிக் கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் மருத்துவமனையில் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் இவ்வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்து போன சதீஷ்குமார் என்பவரின் பிரேதத்தினை பிரேத விசாரணை செய்து **அ.சா.ஆ.6** பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் மேற்படி இவ்வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன சதீஷ்குமார் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்து **அ.சா.ஆ.7** பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். பின்னர் மருத்துவமனையில் இவ்வழக்கு விபத்து சம்பவத்தில் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்றுகள் பெற்றுள்ளார். மேற்படி காயச்சான்றுகள் **அ.சா.ஆ.8, அ.சா.ஆ. 9, அ.சா.ஆ.10** மற்றும் **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

பின்னர் விபத்தில் தொடர்புடைய வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து அவரது வாக்குமூலத்தினை பதிவு செய்து **அ.சா.ஆ. 11 மற்றும் அ.சா.ஆ.12** மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். பின்னர் தனது புலன்விசாரணையின் பொருட்டு வழக்கின் சட்டப்பிரிவுகளை மாற்றி **அ.சா.ஆ.14** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது இ.த.ச. 1860 சட்டப்பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கைகள்), 338, 304(A) of IPC-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக அரசு தரப்பு வழக்கு.

**<u>3. வழக்கு நகல்கள் குவிமுச பிரிவு 207-ன் கீழ் வழங்கப்பட்டது</u>**

இந்த வழக்கானது 08.01.2015 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி ஆஜரானதும் கு.வி.மு.ச. பிரிவு.207-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**<u>4. எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(அ)-ன் கீழ் குற்றம் வினவி கேட்கப்பட்டது</u>**

அரசு தரப்பு ஆவணங்களை பரிசீலித்து பின்னர் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்தும் தண்டிக்க கூடியதுமான குற்றம் புரிந்திருப்பதாக அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்தபடியால், எதிரி மீது இ.த.ச. 1860 சட்டப்பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கைகள்), 338, 304(A) of IPC-ன் கீழ் **குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக்கூறி வினவியபோது**, எதிரி குற்றத்தை மறுத்தார். ஆகவே அரசுத் தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**<u>5. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றவணங்களின் விவரம்</u>**

அரசு தரப்பில் **அ.சா.01 முதல் அ.சா.08 வரையான சாட்சிகள்** விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.01 முதல் அ.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள்** குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிதரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>6. எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம் வினவி கேட்கப்பட்டது</u>**

அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து **கு.வி.மு.ச. பிரிவு. 313(1)(ஆ)-ன் கீழ் வினவியபோது**, எதிரி பொய் சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி பொதுவாக ஏதாவது கூற வேண்டுமா? என்று வினவிய போது பொய் வழக்கு என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று கூறியதன் பேரில் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

1) எதிரிக்கு எதிரான இ.த.ச. 1860 சட்டப்பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கைகள்), 338, 304(A) of IPC-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

இவ்வழக்கின் புகார்தாரர் தனது புகாரில், இன்று 21.03.2014 ம் தேதி மாலை 04.10 மணியளவில் மேற்படி பள்ளியில் இருந்து TN 41 AH 7659 என்ற ஈச்சர் பஸ்ஸில் 60 குழந்தைகளை ஏற்றிக் கொண்டு ராசக்கபாளையம், கரப்பாடி பிரிவு, தண்ணீர் பந்தல், வாய்க்கால் மேடு, சின்னேரிபாளையம், சின்ன நெகமம், பெரிய நெகமம் ஆகிய இடங்களில் குழந்தைகளை இறக்கி விட்டு கோப்பனூர்புதூரில் குழந்தைகளை 12 பேரை இறக்கிவிடுவதற்காக நெகமம் - வடசித்தூர் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 04.50 மணிக்கு சென்று பெரிய வாய்க்கால் முக்கில் வளைவில் தென்வடலாக செல்லும் ரோட்டில் வலது பக்கமாக இடது ஓரத்தில் திரும்பும்போது வடக்கிலிருந்து தெற்காக அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்த ஒரு மூன்று சக்கர மகேந்திரா சேம்பியன் மினி ஆட்டோ நான் ஓட்டிச் சென்ற பள்ளிப் பேருந்தின் வலது முன்பக்கத்தில் மோதி அப்செட் ஆகி கீழே விழுந்தது. நான் எனது வாகனத்தினை இடது ஓரத்தில் ஓட்டியதில் எனது வாகனம் இடது பக்க சென்டர் கல்லில் மோதியதில் வண்டியின் இடது முன்பக்கம் சேதம் அடைந்து வண்டி பள்ளத்தில் இறங்காமல் நிறுத்திவிட்டு நானும் என்னுடன் வந்த நடத்துனர் முருகவேல் என்பவரும் இறங்கி வந்து பார்த்தபோது மேற்படி மினி ஆட்டோ நம்பர் TN 37 AM 6939 என்றும் அதில் வந்தவர்கள் பலத்த காயம் ஏற்பட்டு கிடந்தார்கள்.

விசாரித்தபோது மேற்படி மகேந்திரா சேம்பியன் மினி ஆட்டோவை ஓட்டி வந்தவர் கார்த்திக் என்ற சதீஷ் என்றும் உடன் வந்தவர்கள் சிவா, வசந்த், அருண், சதீஷ்குமார் என்பதும் தெரிய வந்தது. மேற்படி நபர்களில் சதீஷ்குமாருக்கு தலை மற்றும் வலது கை ஆகிய இடங்களில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டு பேச்ச மூச்சு இல்லாமல் கிடந்தார். சிவாவுக்கு தலையில் பலத்த இரத்த காயமும் மற்றவர்களுக்கு இரத்த காயமும் மற்றும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டிருந்தது. இச்சம்பவத்தை வாய்க்கால் மேட்டில் இருந்து நேரில் பார்த்த ராமசாமி, பாலகிருஷ்ணன் ஆகியோர் மற்றும் பொது மக்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸில் காயம்பட்டவர்களை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். எனக்கு வலது கையில் பலத்த காயம் ஏற்பட்டது. நான் ஓட்டி வந்த பள்ளி பேருந்துக்கு முன் பக்கம், வலது பக்க கதவு, இடது முன்பக்கம் ஆகிய இடங்களில் சேதம் ஏற்பட்டிருந்தது என்று புகார் அளித்துள்ளார்.

மேற்படி புகாரைப் பெற்ற நெகமம் காவல்நிலைய அதிகாரி புகாரின் அடிப்படையில் நெகமம் காவல்நிலைய குற்ற எண் 70/2014 ன் கீழ் இ.த.ச. 1860 சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) of IPC – ன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை முடித்து எதிரி மீது இ.த.ச. 1860 சட்டப்பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கைகள்), 338, 304(A) of IPC-ன் கீழ் குற்ற இறுதி தாக்கல் செய்துள்ளார்.

**8.தீர்வுக்கான காரணங்கள் மற்றும் விளக்கங்கள்**

இவ்வழக்கில் அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகியோர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியங்களாக பாவிக்கப்பட்டுள்ளதால் அவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யப் போதுமானதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

இவ்வழக்கில் அ.சா.1 தனது முதல்விசாரணையில், 21-03-2017 ம் தேதி மாலை சுமார் 04.10 மணியளவில் பேருந்து பள்ளியில் இருந்து 60 குழந்தைகளுடன் புறப்பட்டு ராசக்காபாளையம், தொப்பம்பட்டி, சேரிபாளையம், நெகமம் ஆகிய பகுதிகளில் பள்ளி குழந்தைகளை இறக்கி விட்டு, நெகமத்திலிருந்து 15 குழந்தைகளுடன் செட்டிபாளையம் நோக்கி சென்றுகொண்டிருந்தேன். அப்போது செட்டிபுதூர் வாய்க்கால்மேடு அருகே நான் சென்று கொண்டிருந்தபோது அப்போது ஆட்டோ ஒன்று வேகமாக வந்து கவிழ்ந்து நான் ஓட்டி சென்ற பேருந்தின் வலது புறமாக மோதியது. மோதியதில் பேருந்தின் கண்ணாடி உடைந்து எனக்கு வலது கையில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆட்டோவில் பயணித்த மூன்று நபர்கள் காயம்பட்டார்கள். நான் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி மேற்படி காயம் பட்ட நபர்களை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி விபத்தினை ஏற்படுத்திய நபரை எனக்கு தற்போது நினைவில்லை. நான் 2 நாட்கள் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அவர் தனது புகாரில் மேற்படி மினி ஆட்டோ நம்பர் TN 37 AM 6939 என்றும் அதில் வந்தவர்கள் பலத்த காயம் ஏற்பட்டு கிடந்தார்கள். விசாரித்தபோது மேற்படி மகேந்திரா சேம்பியன் மினி ஆட்டோவை ஓட்டி வந்தவர் கார்த்திக் என்ற சதீஷ் என்றும் உடன் வந்தவர்கள் சிவா, வசந்த், அருண், சதீஷ்குமார் என்பதும் தெரிய வந்தது என்று கூறியுள்ளார்.

மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தினை ஆராய்ந்து பார்க்கும்போது, அ.சா.1 தனது புகாரில் மேற்படி மினி ஆட்டோ நம்பர் TN 37 AM 6939 என்றும் அதில் வந்தவர்கள் பலத்த காயம் ஏற்பட்டு கிடந்தார்கள். விசாரித்தபோது மேற்படி மகேந்திரா சேம்பியன் மினி ஆட்டோவை ஓட்டி வந்தவர் கார்த்திக் என்ற சதீஷ் என்று கூறிவிட்டு அவர் தனது நீதிமன்ற முதல் விசாரணையில், மேற்படி விபத்தினை ஏற்படுத்திய நபரை எனக்கு தற்போது நினைவில்லை என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் அ.சா.2 சம்பவம் குறித்து கேள்வியுற்ற சாட்சி ஆக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில், டெம்போ வாகனத்தினை ஓட்டிவயர் யார் என்று எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 சம்பவம் குறித்து கேள்வியுற்ற சாட்சி ஆவார். அவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யப் போதுமானதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

அ.சா.4 பார்வை மகசர் சாட்சி ஆவார். அவர் தனது குறுக்குவிசாரணையில், நான் எங்கு வைத்து கையொப்பமிட்டேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 தனது முதல்விசாரணையில், வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.8 இவ்வழக்கினை புலன்விசாரணை செய்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து புலன்விசாரணை அதிகாரி ஆவார். அவரது சாட்சியம் புலன்விசாரணை குறித்த பொருண்மைகள் குறித்து மட்டுமே விளக்குவதாக உள்ளது.

இந்நிலையில் மேற்படியான அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சிகள் வழக்கு சம்பவ சமயத்தில் எதிரி தான், அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வாகனத்தினை இயக்கி விபத்தை ஏற்படுத்தி அதன் காரணமாக சாட்சிகளுக்கு காயமும் மேலும் சதீஷ்குமார் என்பவருக்கு இறப்பும் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் ஏதும் அளிக்காத சூழ்நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சாட்சியான அ.சா.8 ன் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரியின் மீது சுமத்தப்பட்ட .த.ச. 1860 சட்டப்பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கைகள்), 338, 304(A) of IPC-ன் கீழான இவ்வழக்கை அரசுதரப்பில் ஐயம் திரிபுர நிரூபணம் செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**<u>9. முடிவாக,</u>**

எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட இ.த.ச. 1860 சட்டப்பிரிவுகள் 279, 337 (2 எண்ணிக்கைகள்), 338, 304(A) of IPC-ன் கீழான குற்றச்சாட்டுகள் பொறுத்து குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**<u>10. வழக்கு சொத்து</u>**

இவ்வழக்கில் தடய பொருட்கள் எதுவும் இல்லை. எனவே அதன்பொருட்டு உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் நாள் என்னால் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**11. அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| **அ.சா.1** | ராஜன் |
| **அ.சா.2** | ராமசாமி |
| **அ.சா.3** | பாலகிருஷ்ணன் |
| **அ.சா.4** | ஈஸ்வரன் |
| **அ.சா.5** | சிவா என்கிற கிருஷ்ணன் |
| **அ.சா.6** | வசந்த் |
| **அ.சா.7** | அருண் |
| **அ.சா.8** | ரவி - காவல் ஆய்வாளர் |

**12. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| **அ.சா.ஆ.1** | புகாரில் உள்ள சாட்சிக் கையொப்பம் |
| **அ.சா.ஆ.2** | பார்வை மகசரில் உள்ள சாட்சிக் கையொப்பம் |
| **அ.சா.ஆ.3** | முதல் தகவல் அறிக்கை |
| **அ.சா.ஆ.4** | பார்வை மகசர் |
| **அ.சா.ஆ.5** | மாதிரி வரைபடம் |
| **அ.சா.ஆ.6** | பிரேத விசாரணை அறிக்கை |
| **அ.சா.ஆ.7** | பிரேத பரிசோதனை அறிக்கை |
| **அ.சா.ஆ.8** | வசந்த் என்பவரின் காயச்சான்று |
| **அ.சா.ஆ.9** | சதீஷ் என்பவரின் காயச்சான்று |
| **அ.சா.ஆ.10** | கிருஷ்ணன் என்பவரின் காயச்சான்று |
| **அ.சா.ஆ.11** | TN 41 AH 7659 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| **அ.சா.ஆ.12** | TN 37 AM 6339 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

| | |
|---|---|
| **அ.சா.ஆ.13** | ராஜன் என்பவரின் காயச்சான்று |
| **அ.சா.ஆ.14** | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**13. அரசுதரப்பு சான்று பொருள்: -** இல்லை

**14. எதிரி தரப்பு சாட்சி சான்றாவணம் மற்றும் சான்றுபொருள்:** இல்லை

**15. குறிப்பு:**

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்து வந்தார்.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**//உண்மை நகல்//**

PRAKASAM ELANGOVAN
Digitally signed by PRAKASAM ELANGOVAN
Date: 2026.03.06 12:21:27 +05'30'

**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

| |
|---|
| **நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது** |
| மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், |
| கோயம்புத்தூர். |